Date: 22.09.23 C.C.No. 177 /2018

**அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமான செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.**

**(எதிரி 1 மற்றும் 2 ஆஜர். 3ம் எதரீ ஆஜரில்லை. மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது. )**

**இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி: (அரசுதரப்பில்)**

எனது கணவருக்கு நான் 3 இடத்தில் வேலை வாங்கி கொடுத்தேன். அவர் வேலைக்கு சென்றார் ஆனால் அவர் என்னை கவனிக்கவில்லை. வேலைக்கு சென்ற இடத்தில் ஒரு பொருளான கேஸ்கட் மிசினை பழுதுபார்க்க கொடுத்த இடத்திலேயே விற்றுவிட்டு அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார். அவர் வேலை செய்த இடமானது நான் வேலை செய்யும் அலுவலகத்திற்கு பக்கத்திலிருந்ததால் எனது கணவர் வேலை செய்த கிரானைட் கம்பெனியின் உரிமையாளர் ராம்தேவ் என்பவர் என்னிடம் வந்து எனது கணவர் பழுது செய்ய கொடுத்த மிசினை விற்றுவிட்டு சென்றதாக என்னிடம் சொன்னார். எனது கணவர் என்னிடம் எந்த தகவலும சொல்லாமல் அவர் எங்கு சென்றார் என்று எனக்கு தெரியவில்லை. 3 நாட்கள் கழித்துதான் எனது மாமியார் எனக்கு போன் செய்து எனது கணவர் எனது வீட்டில்தான் இருக்கிறார் என்று சொன்னார். அப்போது அவரிடம் உங்கள் மகன் கேஸகட் விற்றுவிட்டு சென்றுவிட்டார் நான் என்ன பதில் சொல்வது என்று கேட்டேன். அப்போது என்னிடம் அவர் எனது மகனை என்னிடம் அவர் அவரது மகனை மிகவும் கஷ்டப்படுவதாக சொன்னார். அதன்பின்பு நான் யாருக்கும் போன் செய்யவில்லை. அதன்பின்பு எனது கணவர் கோவிட் சமயத்தில் என் வீட்டிற்கு வந்து 9 மாதங்கள் வேலைக்கு செல்லாமல் இருந்தார். அப்போது நான் 1 லட்சம் ரூபாய் செலவு செய்து சிக்கன் கடை வைத்து கொடுத்தேன்.

அதையும் ஒழுங்காக பார்க்காமல் குடித்துவிட்டு எங்களை கஷ்டப்படுத்திவிட்டு, கடையை நஷ்டத்தில் ஏற்படுத்திவிட்டு எனது மகளையும் கவனிக்காமல் சென்றுவிட்டார். அதன்பின்பு எனது கணவர் எனது வீட்டிற்கு வரவே இல்லை. அதன்பின்பு நான் எதிரியின்மீது நடவடிக்கை எடுக்குமாறு மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில்

உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை: (எதிரிகள்தரப்பில்)**

புகார் மனு எந்த தேதியில், எந்த காவல் நிலையத்தில் கொடுத்தீர்கள் என்றால் 2016ம் வருடம் மதுரை மாவட்ட காவல ் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நான் மட்டும்தான் சென்று புகார் கொடுத்தேன். உங்களுடைய புகார் மனுவான அ.சா.ஆ.1 காவல் நிலையத்தல் கொடுத்துள்ளதாக காட்டப்படுகிறது என்றால் தவறு. நான் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம்தான் கொடுத்தேன். சம்பவம் எங்கு நடந்தது எந்த தேதியில் நடந்தது என்ற விவரத்தை உங்களுடைய புகாரில் சொல்லியுள்ளீரா என்றால் என்னுடைய திருமணத்திற்கு பிறகு பிரச்சனைகள் நடந்தது அனைத்தையும் சொல்லியுள்ளேன். திருமணம் நடந்ததற்கு பின்பு உங்களுக்கும் உங்கள் கணவரான 1ம் எதிரிக்கும் பிரச்சனை நடந்ததாக சொல்கிறீர்கள், அவ்வாறு திண்டுக்கல்லில் உங்கள்தரப்பில் புகார் ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் இல்லை. உங்களுடைய திருமணம் 2012ம் வருடம் நடந்த பிறகு இவ்வழக்கில் புகார் சம்மந்தமாக 2016-ம் வருடம் மேலூரில் புகார் கொடுத்துள்ளீர்கள் என்ால் ஆமாம். உங்களுடைய புகார் மனுவில் உங்கள் கணவரான 1ம் எதிரியை விசாரண செய்து சேர்த்து வைப்பதற்காகத்தான் மனு கொடுத்தீர்கள் என்றாலம் ஆமாம். பின்னிட்டு சாட்சி சிறிதுநேரம் கழித்து என் தாய்வீட்டில் போட்ட 12 பவுன், சீர்வரிசையை என்னிடம் கொடுத்திட வேண்டியும் மேலும் என்னுடைய பெண் குழந்தையையும் சேர்த்துக்கொண்டு வாழவேண்டி கேட்டுக்கொண்டேன். உங்களுடைய திருமணத்திற்கு பிறகு 2ம் எதிரியான உங்களுடைய மாமியார் தேனிக்கு சென்று வசித்து வந்தார் என்றால் சரிதான்.

3ம் எதிரியான உங்களுடைய நாத்தனார் உங்கள் திருமணத்திற்கு முன்பு அவருக்கு திருமணமாகி அவருடைய கணவர் வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். 1ம் எதிரியான உங்களுடைய கணவரை பிரிந்து எத்தனை வருடங்களாக வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் கடந்த 24.08.20லிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறேன். வழக்கு நடந்துகொண்டு இருக்கும் சமயத்தில் நீங்களும் உங்கள் கணவரான 1ம் எதிரியும் சேர்ந்துதான ் வாழ்ந்து வந்தீர்கள் என்றறல் திருந்தி என்னுடன் வாழ்வார் என்ற நம்பிக்கையில் வாழந்து வந்தேன். இவ்வழக்கில் புகார் கொடுக்கும் சமயத்தில் நீங்கள் உங்கள் தாயார் வீட்டில்தான் வசித்து வந்தீர்கள் என்றால் ஆமாம். புகார் கொடுத்தபோது உங்கள் கணவரான 1ம் எதிரி

உங்களோடுதான் வசித்து வந்தார் என்றால் இல்லை. உங்கள் புகாரில் உங்களை அடித்து கொடுமை செய்ததாக சொல்லப்படுவதற்கு மருத்துவ சிகிச்சை எடுத்ததற்கான ஆவணம் மற்றும் எந்த தேதியில் எதைக்கொண்டு அடித்தார்கள் என்பதை சொல்லியுள்ளீர்களா என்றால் பலமுறை மது அருந்திவிட்டு என்னை அடித்து கொடுமைப்படுத்தியுள்ளார். மருத்துவ சிகிச்சைக்கான ஆவணம் ஏதும் என்னிடமில்லை. ஆனால் இயற்கை வைத்தியம் எடுத்துக்கொண்டேன்.

உங்கள் கணவருக்கு நீங்கள் 3 இடங்களில் வேலை வாங்கி கொடுத்ததாக சொல்லியுள்ளீர்கள், அவ்வாறு எந்தெந்த கம்பெனியில் வேலை வாங்கி கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் கணவர் கடைசியாக வேலை பார்த்த கம்பெணியில பொருள் விற்றுவிட்டது சம்மந்தமாக உங்களிடம் உரிமையாளர் சொல்லியதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளீர்கள், அவ்வாறு கம்பெணியின் உரிமையாளர் அவர்களால் உங்கள் கணவருக்கு எதிராக புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் அவர்களிடம் நம்பிக்கையாக ஏற்கனவே வேலை பார்த்ததால் புகார் கொடுக்கவில்லை. நீங்கள் தற்போது மதுரை மாவட்டத்தில் அங்கன்வாடி பணியாளராக அரசு பணியாற்றி வருகிறீர்கள் என்றால் ஆமாம். கடந்த 2020ம் வருடம் நீங்களும் உங்கள் கணவரும் சேர்ந்து வாழ்ந்த சமயத்தில் உங்களுடைய சகோதரரின் திருமணத்திற்கு 1ம் எதிரி 2 பவுன் நகை போட்டார் என்றால் இல்லை, ஒரு பவுன்தான் போட்டார். கடந்த 14.12.16ல் வீரபாண்டி காவல் நிலையத்தில் நீங்கள் கொடுத்த புகாரின்பேரில் நகைகள் அனைத்தும் 3ம் எதிரியான முத்துலெட்சுமி வசம் இல்லை என்று எழுதி கொடுத்துள்ளீர்கள் என்றறல் காவல் நிலையத்தில் என்னையும், என் குடும்பத்தாரையும் வைத்து விசாரணை செய்ததில் மிரட்டி எழுதி வாங்கினார்கள்.

நீங்களும், உங்கள் கணவரும் சிலைமானில் சேர்ந்து வாழ்ந்தபோது உங்கள் கணவரான 1ம் எதிரி உங்களுக்கு 5 பவுன் செய்து போட்டார் என்று சொன்னால் இல்லை. ஒரு பவுன்தான் போட்டார். அதுவும் என்னுடைய பழைய நகையை அழித்துதான் புதிய நகை வாங்கி போட்டார். அதற்கான ஆவணம் என்னிடம் உள்ளது. உங்களுக்கு மதுரை மாவட்டத்தில் அரசு வேலை கிடைத்ததால் திண்டுக்கல் மாவட்டத்தில் உங்கள் கணவரான 1ம் எதிரியுடன் சேர்ந்துவாழ மறுக்கிறீர்கள் என்று சொன்னால் இல்லை. அவ்வாறு சொல்வது தவறு. தற்போது நீங்கள் உங்கள் கணவரான 1ம் எதிரியுடன் சேர்ந்துவாழ தயாராக உள்ளீர்களா

என்றால் எனக்கு உயிர்பயம் உள்ளது. இப்பொழுதும் 1ம் எதிரியான உங்கள் கணவர் உங்களுடன் சேர்ந்துவாழ தயாராக உள்ளார் என்றால் எனக்கு விருப்பமில்லை. நான் கோவிட் கால கட்டத்தில் பாதிக்கப்பட்டு இருந்த சமயத்தில் என் கணவருக்கு தகவல் சொல்லியும் என்னையும், குழந்தையையும் கவனிக்கவில்லை. உங்களுடைய புகார் மனுவில் எதிரிகள் அணைவரும் வரதட்சனை கேட்டார்கள் என்று எந்த இடத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அதைப்பற்றி நான் சொல்லவில்லை.

தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரங்களை உங்களுடைய புகாரிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய சீர்வரிசை திருப்பிக்கொடுத்திடவேண்டியும், குழந்தையுடன் சேர்ந்து வாழவேண்டிதான் புகார் கொடுத்திருந்தேன். நீங்கள் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை வழக்கிற்காக எதிரிகள்மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் இல்லை.